# பஸ்ஸற பிரதேச சபை
# பதுளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 செப்தெம்பர் 04 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 21 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 செப்தெம்பர் 27 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் பஸ்ஸற பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பஸ்ஸற பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 13,333,442 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிக் கட்டுப்பாடு

(அ) 1996 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 75,712 பெறுமதியான 03 மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 189 மற்றும் 486 இன் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஆம் ஆண்டிற்கு முன்னர் 02 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 64,496 தொகையான முற்பணம் நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2,855 | 2,406 | 1,608 |
| (ii) | வாடகை | 9,407 | 9,504 | 901 |
| (iii) | ஏனைய வருமானம் | 5,223 | 1,447 | 5,773 |

### 2.2.2 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 5,057,794 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 5,327,195 |

### 2.2.3 கடை வாடகை

2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் கடை வாடகை அறவிடப்படாத காரணத்தினால் 2005 நவம்பர் தொடக்கம் 2011 திசெம்பர் 31 வரையும் சபையினால் இழக்கப்பட்ட வருமானம் ரூபா 1,491,100 ஆக இருந்தது.

### 2.3 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளிலிருந்து செயற்பாடற்றுக் காணப்படுகின்ற சபைக்குச் சொந்தமான இரண்டு வாகனங்களை விற்றுத்தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 போதிய அதிகார பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்படாமல் தொண்டர் அமைப்புக்களுக்காக கூடாரத் துணிகள் வழங்குவதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 46,500 செலவிடப்பட்டிருந்தது.

## 2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நாளாந்தக் கொடுப்பனவின் அடிப்படையில் சேவையாற்றிய 05 ஊழியர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 46,872 தொகையான பங்களிப்புப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நாளாந்தக் கொடுப்பனவின் அடிப்படையில் சேவையாற்றிய 05 ஊழியர்களுக்கான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 7,031 தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.